DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 15ம் நாள் சாட்சியாகிய வேலு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | வயது | 60 |
| த/பெ. | அண்ணாமலை | இனம் | ஆண் |
| கிராமம் | பருத்திபுத்தூர் | தொழில் | விவசாயம் |
| சமயம் | | தாலூக்கா | |

C.C.54/2017
(1 முதல்3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).
**முதல் விசாரணை 15.04.2025 அ.சா.4**

1. நான் தற்போது பருத்திபுத்தூரில் வசித்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை அரசு தரப்பில்-**

2. என்னிடம் காட்டப்படும் சாட்சிகள் அழைப்பாணை கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பமும், பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பமும் ஒரே மாதிரி உள்ளது என்றால் நான் பார்வை மகஜரில் கையொப்பம் போடவில்லை.

3. 11.08.2016ம் தேதி அரக்கோணம் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.391/2016 வழக்கில் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், ஜெகன் என்பவர் முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் இல்லை.

4. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வைமகஜரில் சாட்சி கையொப்பம் போட்டதாக தெரிவித்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனது உறவினர் என்றால் சரிதான். போலீசார் அழைத்ததால் நீதிமன்றம் வந்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.